CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு

8th Anniversary Celebrations — The Kovai Herald

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 8 | English & Tamil Weekly | 13.7.2025 Sunday | 6 Pages | Price Rs.3/-

# அதிமுக வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்

## அமித்ஷாவுக்கு எடப்பாடி பதில்

தி கோவை ஹெரால்டு



பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைக்கும் என்று அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு அதிமுக பாஜககூட்டணியில் இருந்து விலகியது. இந்தநிலையில் 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி மீண்டும் பாஜகவுடன்அதிமுககூட்டணிஅமைத்தது. கடந்த ஏப்ரல் மாதம் கூட்டணி உருவானதில் இருந்தே அதிமுகவும், அக்கட்சி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கூட்டணி அமைத்த போதே, உள்துறைஅமைச்சரும், பாஜக மூத்த தலைவருமானஅமித்ஷாதமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி என்று கூறினார். இதை எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக மறுத்தார். கூட்டணி ஆட்சியில்லை. அதிமுகதான்ஆட்சிஅமைக்கும் என்று பதிலளித்தார்.

இந்தநிலையில் தமிழ் நாளிதழான தினத்தந்திக்கு கடந்த மாதம் அமித்ஷா அளித்தபேட்டியில்,தமிழகத்தில் கூட்டணி ஆட்சிதான் என்று கூறியிருந்தார். மத்திய இணையமைச்சர் எல்.முருகனும் அமித்ஷா எடுப்பதே இறுதி முடிவு என்று ஊடகங்களுக்கு பேட்டியளித்தார்.இதற்கு, கள்ளக்குறிச்சியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பதிலத்து பேசிய எடப்பாடி பழனிசாமி, அதிமுக அதிக இடங்களில் தனிப்பெரும்பான்மையாக வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என தெரிவித்திருந்தார்.

இந்தசூழலில் இந்தியன் எஸ்க்ப்ரஸ் ஊடகத்துக்கு அமித்ஷா பேட்டி ஒன்று அளித்துள்ளார்.

அதிமுகபாஜககூட்டணி வெற்றிவாய்ப்புகள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு, “நாங்கள் தோல்வியை கண்டு அஞ்சமாட்டோம்” என்று பதிலளித்துள்ளார் அமித்ஷா.

நீங்கள் வெற்றி பெற்றால் ஆட்சியில் இடம்பெறுவீர்களா என்ற கேள்விக்கு, “ஆமாம்” என்று தெரிவித்துள்ளார். இந்தநிலையில் அமித்ஷாவின்பேட்டிகுறித்து கடலூரில் செய்தியாளர்களைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு “நான்ஏற்கனவே தெளிவாக சொல்லிவிட்டேனே...பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைக்கும். நன்றி! வணக்கம்” என்று கூறியுள்ளார்.

# கோவை அவினாசி 10.1 கீ.மீ பாலம் ஆகஸ்ட் மாதத்தில் பயணிக்க தயார்

தி கோவை ஹெரால்டு



கோவை அவிநாசி சாலையில் மேம்பாலப் பணிக்காக ஹோப் காலேஜ் அருகே தூண்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தத் தூண்களின் மீது இரும்பு பாலம்அமைக்கும்பணிநடக்கிறது. ஒவ்வொரு இரும்பு பாலமும் 90 டன் எடை கொண்டது. 52 மீட்டர் நீளம் உடையது. இரண்டு தூண்களுக்கு இடையேமொத்தம் எட்டு இரும்பு பாலங்கள் பொருத்தப்படும். பாலத்தை தூக்கி வைக்கும்போது ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. வியாழக்கிழமை அதிகாலையில் இரண்டு பாலங்கள் வைக்கப்பட்டது. இன்னும் ஆறு பாலங்கள் அடுத்தடுத்து வைக்கப்படுகிறது. இரண்டு கிரேன்கள் மூலம் பாலங்களை தூக்குகிறார்கள். ரயில்வே நிர்வாகம் நான்கு நாட்களுக்கு இரவிலும், அதிகாலையிலும் பாலங்களை வைக்க நேரம் ஒதுக்கியுள்ளது. அதிமுக ஆட்சிக்காலத்தில் இந்த பாலம் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

கான்கிரீட் 28 நாட்கள் வரை கெட்டியாக வேண்டும். பிறகு, அதன் மேல் தார் சாலை போடப்படும். மேம்பாலப் பணி 95% முடிந்துவிட்டது. மீதி வேலைகள் ஆகஸ்ட் நடுப்பகுதியில் முடியும். 10.1 கி.மீ தூரமுள்ள முக்கிய சாலையை ஆகஸ்ட் மாதத்தில் இருந்து பயன்பாட்டுக்குவரும்.10.1கி.மீ நீளமுள்ள இந்த மேம்பாலம் கோயம்புத்தூர் மக்களுக்கு மிகுந்த பலனளிக்கும். இந்த மேம்பாலமானது அமைக்கப்பட்டால் போக்குவரத்து நெரிசல் என்பது வெகுவாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் முதன்மையான விவசாய வர்த்தக கண்காட்சி

AGRI INTEX ®
23வது பதிப்பு
அக்ரி இன்டெக்ஸ் 2025
(A Event of CODISSIA Intec Technology Centre)
Organised by CODISSIA Intec Technology Centre

10 முதல் 14 வரை ஜுலை 2025
கொடிசியா தொழிற்காட்சி வளாகம், கோயம்புத்தூர்

Supported by: ICAR-Central Institute of Agricultural Engineering; Tamil Nadu Agricultural University; Tamil Nadu Veterinary and Animal Sciences University; Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University; NABARD; MSME
In Association with: Agricultural Machinery Manufacturers' Association; Department of Agriculture & Farmers Welfare, Govt. of India



● 500 மேற்பட்ட கண்காட்சியாளர்கள்.
● 2000 மேற்பட்ட நவீன பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
● வேளாண் வல்லுநர்களை கொண்டு கருத்தரங்கம்.

Scan for Registration
Scan this & Register yourself
(or)
Visit Website
https://visitor.codissia.com

Principal Category Exhibitor: Niagara Technology Irrigation Automation — Wired & Wireless
Platinum Category Exhibitor: Since 1962 KADIR — Pioneer for Prosperity
Supporting Media: The Poultry Business
Supported by: BCC, PFRC

Terms & Conditions
- Entry Restricted below 15 Years of Age.
- General Public Entry Fee : Rs.50/-
- Registration is Mandatory.
- Entry for Students from 2 pm on 14th July 2025 & on payment of Entry Fee.

Visitor Time : 9.00 am to 6.00 pm
Contact : 90952 55911, 90950 55911

வாருங்கள் பயன் பெறுங்கள்!!

31 ஆண்டுகால சமூகப் பணியில்
30 Years 1995 - 2024
தி யுனைடெட் முதியோர் இல்லம்
THE UNITED HOME FOR THE AGED
96 A, சத்தி மெயின் ரோடு, குரும்பபாளையம்,
கோயம்புத்தூர்- 641 107.
செல் : 99659 04313




# 5 நிமிட தாமதத்தால் பல மாதங்கள் உழைப்பு வீண்... டி.என்.பி.சி மையத்தில் அழுத இளம்பெண்



தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் (TNPSC) நடத்தும் குரூப் 4 தேர்வுகள் தமிழகம் முழுவதும் இன்று காலை தொடங்கியது.தேர்வுமையத்திற்கு காலை 9 மணிக்கு முன்பாக கட்டாயம் வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில், திருநெல்வேலி மாவட்டம் பாளையங் கோட்டையில்உள்ளஒருதேர்வுமையத்தில், காலை 9:05 மணிக்கு வந்த சில தேர்வர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தேர்வு மையத்தின் கதவுகள்முழுமையாகஅடைக்கப்பட்ட நிலையில், தேர்வர்கள் கதவு வழியாக அதிகாரிகளை அழைத்துப்பார்த்தும் எந்தப்பலனும்இல்லை. இதனால், இளம் பெண் ஒருவர் மிகுந்த ஏமாற்றத்துடனும் அடைக்கப்பட்ட கேட் மீது தலை வைத்து கதறி அழுத சம்பவம்சோகத்தைஏற்படுத்தியது. டி.என்.பி.சி சட்டதிட்டங்களின்படி, தாமதமாக வரும் தேர்வர்களுக்கு அனுமதி அளிக்க வாய்ப்பில்லை என்றுஅதிகாரிகள்திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். இதனால், பல மாதங்களாக கடினமாக உழைத்து தேர்வு எழுத வந்த தேர்வர்கள் மிகுந்த மனவேதனை அடைந்தனர்.

தேர்வு எழுத செல்பவர்கள் செய்ய வேண்டியது என்ன?

அரசுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து தேர்வர்களும், தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் குறித்து மிகவும்கவனமாகஇருக்கவேண்டும். இதுபோன்ற முக்கியமான தேர்வுகளுக்குச் செல்லும்போது, தேர்வு நடைபெறும் மையத்திற்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே சென்றுவிட வேண்டும். எதிர்பாராத போக்குவரத்து நெரிசல், வாகனக் கோளாறுகள் அல்லது வேறு ஏதேனும் தடங்கல்கள் ஏற்படக்கூடும் என்பதால்,பயணத்தை முன் கூட்டியே திட்டமிட வேண்டும். தேர்வு மையம் எங்கே உள்ளது என்று முன்னதாக ஒரு முறை சென்று பார்த்து வருவதும்நல்லது.குறிப்பாக, முதல் முறையாகச் செல்லும் மையமாக இருந்தால் இது மிகவும் அவசியம்.

தேர்வுக்கான ஹால் டிக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும், நேரம் தொடர்பான விதிகளை, கவனமாகப்படித்துதெரிந்து கொள்ள வேண்டும். தேர்வு மையத்துக்கு ஒரு சில நிமிடங்கள் தாமதமாக சென்றால் கூட அனுமதிக்க மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதனால் உங்கள் கடின உழைப்பும், எதிர்காலமும் பாதிக்கப்படக்கூடும். தேர்வாணையங்கள் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றுவதால், எந்தவொரு காரணத்திற்காகவும் தாமதத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை தேர்வர்கள் புரிந்துகொண்டு, உரிய திட்டமிடலுடன் செயல்பட வேண்டும்.

## கர்மவீரர் காமராஜர் பொன்மொழிகள்



- கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்த ஒரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது
- ஒரு பெண்ணுக்கு கல்வி புகட்டுவது ஒரு குடும்பத்திற்கே கல்வி தருவதாகும்
- நேரம் தவறாமை என்னும் கருவியை உபயோகிப்பவர் என்றும் கதாநாயகன் தான்.
- எல்லா மக்களிடமும் குறைபாடுகள் மட்டுமல்ல ஏதேனும் சிறப்பு சக்திகள் இருக்கத்தான் செய்யும்!

LAKSHAKA TEX LIMITED

## River Expands Footprint in Tamil Nadu with First Erode Store

Electric scooter manufacturer River has launched its newest Tamil Nadu store in Erode. Spanning 1050 sq. ft., River Store Perundurai Road is launched in association with Sri Sai Autos. The River Store provides customers a first-hand view into all River offerings, including the Indie, accessories, and merchandise. The River Store Perundurai Road is located at No 314/2A2, Chinnakadu Thottam, Veerapampalayam Pirivu, Pannai Nagar, TPN Hospital, Perundurai Road, Erode 638012




Fulfillment is not attained by some action. In every stage of your life you thought, "If this happens, my life will become complete." This thought may have come up within you. When you were a child you thought, "If I get this toy, my life will be complete." You got that, but after three days you took it and threw it into the dustbin. Life did not attain fulfillment. When you were in school you thought that if you passed your examination, life would be complete. That happened, and still nothing happened. Then you thought that if you complete your education, your life would be complete. That too happened. Now you thought, what is the use of all this education if you are not able to stand on your own two feet? That happened. After three months you began to think, what is the use of working like a donkey? If you get married to that man or woman who is in your heart, your life would be complete. That happened and then you know what happened!

Whatever action you may have performed, life has not attained any fulfillment. Fulfillment will not come because of some action that you perform. Please see, why have you been performing one action after another? It is towards fulfillment. People who perform action in excess, when you ask them why they are doing all that they are doing, they answer, 'What to do? Food, wife, kids - who will take care of them?' The truth is, even if you fulfill all his needs, this person cannot sit quietly for even a day. He cannot even sit for three hours! He has to do something. This is because your inner nature has not attained fulfillment and you are trying to do it through actions. Your actions are not happening for your food or comforts; they are all happening in search of fulfillment. Whether this has happened with or without awareness, the actions indicate the search for unboundedness.

Only if your inner nature is complete, your life will attain fulfillment. If, within you, your inner nature has attained fulfillment, there will be no need for action. If the external situation demands some action, you can do it joyously. If it is not needed, you can simply sit with eyes closed. When a person has reached a state where there is no need to perform any action, we can say that the person has become unbounded. But that does not mean that this person does not do any work at all. If the external situation demands it, he can work for twenty-four hours. But action is not needed for his inner nature. He is not bound to action. He is the same, even without action.

## International Conference at KMCH College of Pharmacy



THE KOVAI HERALD

International Conference "Integrating Clinical Pharmacokinetics and Biomarkers: Shaping the Next Generation of Therapeutics" organised by KMCH College of Pharmacy, Coimbatore in association with The TamilNadu Dr.M.G.R. Medical University, Chennai at KMCH Hospital Conference Hall.

Dr.A.Rajasekaran, Principal, KMCH college of Pharmacy delivered the welcome address. Dr. Nalla G Palaniswami, Chairman, Kovai Medical Center Hospital and Dr.NGP Research and Educational trust, delivered the chief guest address.

Dr. Thavamani D Palaniswami, Managing Trustee, Dr NGP Research and Educational trust delivered the presidential address. Dr. Arun N.Palanisami, Executive director, Kovai Medical Center and Hospital addressed the audience.

The resource persons were Datuk Dr.Allan Mathews, Dean and Professor, Quest International University, Malaysia, Dr. Jaya Muneswarao, Clinical Pharmacist, Pegawai Farmasi UF 14, Hospital, Palau Pinang, Malaysia. Dr.J.Venugopal, Consultant Pulmonologist, Kovai Medical Center and Hospital delivered a lecture on emerging biomarkers and its clinical applications. The vote of thanks was delivered by Dr.K.Suresh Kumar, Vice Principal KMCH College of Pharmacy and prayer song.

## Coimbatore CREDAI Team thanks Tamil Nadu CM in person for Release of Coimbatore Master Plan-2041



THE KOVAI HERALD

Office Bearers of CREDAI Coimbatore met the Chief Minister of Tamil Nadu, M.K. Stalin, and thanked him for releasing the Coimbatore Master Plan - 2041.

A team of CREDAI Office Bearers including S.R. Arvind Kumar, President, Rajiv Ramasamy, Vice President, P. Karthik Kumar Treasurer, R. Chandramouli, Member, Gugan Illango, President elect CREDAI Tamil Nadu and N.K. Balachandran, General Manager met the Tamil Nadu Chief Minister and expressed their sincere thanks.

The event was attended by S. Muthusamy, the Minister of Housing and Urban Development, Prohibition and Excise, Kakarla Usha, Additional Chief Secretary, Housing and Urban Development, P. Ganesan, I.A.S., Director, Town and Country Planning, Office Bearers from Credai Chennai and other government officials.

## Sports Hall and Bhoomi Pooja for Integrated Laboratory Block at Sarkar Samakulam Government School



THE KOVAI HERALD

The inauguration of the C.R. Swaminathan Auditorium & Sports Hall and the Bhoomi Pooja ceremony for the Integrated Laboratory Block under the CRS Memorial Endowment Project were successfully held at the Government Higher Secondary School, Sarkar Samakulam, Kovilpalayam, Coimbatore.

The event was graced by Pavankumar Giriyappanavar, District Collector of Coimbatore, who inaugurated the auditorium and participated in the Bhoomi Pooja ceremony. Balamurali, Chief Educational Officer, Coimbatore, also honored the occasion with his presence.

G. Soundararajan, Founder of RAAC & Chairman, C.R.I. Pumps, R.R. Balsundharam, Chairman, CRS Memorial Endowment Committee, J. Thulasidharan, President, RAAC, Suresh, Union Chairman, S.S. Kulam, Vijayakumar, Vice Chairman, S.S. Kulam, Vimala, Headmistress, S.S. Kulam School and Members of the CRS family were present on the occasion.

As part of the celebrations, the CRI Pumps School Toppers Awards for the academic year 20232024 were presented to the top three students of Classes X and XII.

## Train Services Diverted Due to Girder Launch Work at Peelamedu Station

Southern Railway has announced temporary changes in train services owing to a Traffic Block and Power Block scheduled for the launch of a steel girder over the existing Road Over Bridge at Peelamedu railway station. The block will be in effect from July 9 to July 12, 2025, during which several train routes will be altered. As a result, many trains will skip their scheduled halt at Coimbatore or Coimbatore North stations, with alternative arrangements made at Podanur Junction.

Train No. 16316 Thiruvananthapuram North Mysuru Express, scheduled to depart from Thiruvananthapuram at 4:45 p.m. on July 9, 10, 11, and 12, will be diverted to run via Podanur and Irugur, bypassing Coimbatore. In lieu of this, an additional stop has been provided at Podanur, where the train will arrive at 12:52 a.m. and depart at 12:55 a.m.

Similarly, Train No. 16187 Karaikal Ernakulam Express, leaving Karaikal at 4:30 p.m. on the same dates (July 9 to 12), will also be diverted via Irugur and Podanur, skipping Coimbatore. This train will stop at Podanur from 1:22 a.m. to 1:25 a.m.

Train No. 16317 Kanniyakumari Shri Mata Vaishno Devi Katra Himsagar Express, departing from Kanniyakumari at 2:15 p.m. on July 11, will run via Podanur and Irugur instead of stopping at Coimbatore. An additional halt has been arranged at Podanur between 1:15 a.m. and 1:20 a.m.

The Kanniyakumari Dibrugarh Vivek Express (Train No. 22503), which departs at 5:25 p.m. on July 9, 10, 11, and 12, will also be diverted via the same route, with a stop at Podanur between 4:12 a.m. and 4:15 a.m., instead of halting at Coimbatore.

Meanwhile, Train No. 12671 Dr. MGR Chennai Central Mettupalayam Nilgiri Superfast Express, leaving Chennai at 9:05 p.m. on the above-mentioned dates, will be diverted via Irugur and Podanur. This train will skip its usual halt at Coimbatore North.

Train No. 18567 Visakhapatnam Kollam Express, scheduled to depart Visakhapatnam at 7:20 a.m. on July 10, will also be diverted via Irugur and Podanur, skipping the Coimbatore stop. It will halt at Podanur between 3:37 a.m. and 3:40 a.m. Finally, Train No. 22669 Ernakulam Patna Superfast Express, leaving Ernakulam at 11:55 p.m. on July 12, will be diverted through Podanur and Irugur, bypassing Coimbatore. A temporary stop will be provided at Podanur from 4:37 a.m. to 4:40 a.m.

Southern Railway has requested passengers to take note of these diversions and plan their journeys accordingly. Passengers are advised to check the updated train schedules and routes prior to travel to avoid inconvenience.

## Catalyst Conclave 1.0 by NGI TBI Sparks Innovation and Startup Collaboration




THE KOVAI HERALD

The Nehru Group of Institutions Technology Business Incubator, in association with Startup TN, successfully organized Catalyst Conclave 1.0-a milestone initiative.

Hosted at the NGI TBI campus in Thirumalayampalayam, Coimbatore, the conclave convened over 100 incubation heads, academic leaders, ecosystem partners, and startup enablers from across the state for meaningful exchange, collaboration, and forward-looking strategies in innovation.

The conclave was chaired by Dr. P. Krishnakumar, President of NGI TBI and Secretary of Nehru Group of Institutions. The event was graced by the presence of K. E. Prakash, Member of Parliament (Erode), and Sivarajah Ramanathan, CEO of Startup TN. Sivarajah Ramanathan, CEO of StartupTN, commended the startups for their innovative contributions and progress. Sivarajah Ramanathan, CEO of StartupTN addressed the audience with an overview of StartupTN's mission.

The conclave also featured dynamic knowledge sessions delivered by seasoned experts, including C.N. Premkumar, Associate VP, StartupTN; Mittu Tigi, CEO of AIC IIIT Kottayam; Dr. S. Radhakrishnan, psychologist; and Vishal Nair, entrepreneur and educator from the Wadhwani Foundation. Dr. B. Vaikundaselvan, Executive Director of NGI TBI, inaugurated the event with a welcome address. Karthika S P, Research Associate at NGI TBI, delivered the vote of thanks.

## Coimbatore Doctor R.Balamurugan Honoured with IMA's Best Public Service Medical Award



THE KOVAI HERALD

Dr. R. Balamurugan, noted diabetologist and Joint Secretary of the Coimbatore branch of the Indian Medical Association (IMA), was conferred with the Best Public Service Medical Award by the Tamil Nadu State Branch of the IMA in recognition of his extensive service in diabetes awareness and care.

The award was presented during the Doctor's Day Celebrations and State-Level Award Function held at the IMA Headquarters in Tambaram, Chennai.

The event was presided over by Dr. Senguttuvan, State President of IMA Tamil Nadu. Dr.Rajamoorthy, Director of Rural Medical Services, attended as the Chief Guest and delivered a special address. Dr. Karthik Prabhu, State Secretary, and Dr. Abul Hassan, Marasirithar, were also present during the felicitation.

## Kirtilals wins two prestigious awards at Jewellery Eminence Awards 2025



Kirtilals, a name synonymous with timeless elegance and exceptional craftsmanship, added two more prestigious accolades to its legacy at the Jewellery Eminence Awards (JEA) 2025 held in Jaipur. The brand was honoured with the "Diamond / Colour Stone Earring of the Year" and the "Theme of the Year: Royale d'Art" awards, celebrating its innovation, design excellence, and artistic brilliance.

The glamorous event was graced by actress Shazahn Padamsee, who presented the awards to Kirtilals in recognition of its creative mastery and consistent pursuit of perfection. Suraj Shantakumar, Director Business Strategy, expressed heartfelt gratitude and pride.

## Nipah Virus Alert: Coimbatore District Collector Urges Public to Stay Vigilant

In light of the recent Nipah virus outbreak in Kerala, Coimbatore District Collector Pawan Kumar K. Giriyappanavar has advised the public to remain cautious and follow preventive measures.

In an official statement, he said:

"Nipah virus cases have been identified in Kerala. This virus is zoonotic, meaning it can spread from animals to humans. Fruit bats (flying foxes) are natural carriers of the virus, which can also spread through infected pigs or direct contact with infected humans. There is a risk of transmission to humans through consumption of fruits bitten by infected bats.

Nipah virus can cause symptoms similar to brain fever, including high fever, headache, dizziness, loss of consciousness, mental confusion, coma, and potentially death. Symptoms typically appear 5 to 15 days after exposure, and in some cases, severe complications like loss of consciousness or coma may occur within 24 to 48 hours of symptom onset.

To detect the infection, tests for fever and brain inflammation must be conducted. Blood samples from suspected patients should be examined. Once diagnosed, patients must be admitted to hospitals and given intensive care.

Since the virus is contagious, infected individuals should be isolated and treated in dedicated rooms. Healthcare providers and caregivers must use protective gear like face masks, practice hand hygiene, and carefully dispose of or disinfect items used by patients.

It is essential to thoroughly wash fruits and vegetables before use and avoid eating fruits that may have been bitten by bats. Households must maintain cleanliness in and around their surroundings. Pigs should be kept away from residential areas, and any signs of illness in pigs must be reported immediately to veterinary authorities.

Anyone showing symptoms such as fever or signs of infection should visit the nearest government primary health centre or hospital and seek proper medical advice and treatment," the Collector added.

## எனது சடலத்தில் இருந்து பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் தற்கொலை செய்த தனியார் பால் நிறுவன அதிகாரி கடிதம்



ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் நவீன் (37). இவர் தனியார் பால் நிறுவனத்தில் மேலாளராக சென்னையில் பணியாற்றி வந்தார். இதை யொட்டி மாதவரத்தில் நவீன் தங்கியிருந்தார். இந்தநிலை யில், பால்நிறுவனத்தில் நடந்த ஆடிட்டிங்கில் நவீன், 44.5 கோடி ரூபாய் மோசடி செய்தது தெரியவந்தது. அதுதொடர்பாக பால் நிறுவனத்தின் வழக்கறி ஞர்கள், கடந்த 27.6.2025-ம் தேதி கொளத்தூர் துணை கமிஷனர் பாண்டியராஜனிடம் புகார் ஒன்றைக் கொடுத்தனர். அதுதொடர்பாக போலீஸார் விசாரணை நடத்த தொடங் கியதும் நவீன் மனமுடைந்து காணப்பட்டார்.

இந்தநிலையில் கடந்த 9ம் தேதி புழல் காவல் நிலை யத்துக்குட்பட்ட பிரிட்டானிய நகர் 1-வது மெயின் ரோட்டில் உள்ள குடிசையில் நவீன் தூக் கில் தொங்குவதாக நவீனின் உறவினர்களுக்கு தகவல் கிடைத்தது. புழல் போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து நவீ னின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் நவீன் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என விசாரித்தபோது அவர் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு தான் வேலை செய்த நிறுவனத்துக்கு இ-மெயில் அனுப்பிய விவ ரம் கிடைத்தது. அதில் 5 அதிகாரிகளின் மிரட்டலால் இந்தவிபரீதமுடிவைஎடுப்பதாக நவீன் குறிப்பிட்டிருப்பதாக தகவல் உள்ளது.

இதுகுறித்து நவீன் தரப்பில் பேசியவர்கள், "கடந்த 27.4.2022-ம் ஆண்டு முதல் நவீன், பால் நிறுவனத்தில் கருவூல மேலாளராக பணியாற்றி வந் தார். இவர் 44.5 கோடி ரூபாய் பணத்தை கையாடல் செய்த தாக பால் நிறுவனம் தரப்பில் காவல் துறை அதிகாரி ஒருவரி டம் புகாரளிக்கப்பட்டது. அந்த அதிகாரியின் உத்தரவின் பேரில் வழக்கு எதுவும் பதிவு செய்யாமல் போலீஸார் நவீ னிடம் விசாரித்திருக்கிறார்கள். அப்போது நவீன், பணத்தை திரும்ப கொடுப்பதாகக் கூறிய பிறகும் விசாரணை என்ற பெயரில் அவருக்கு மனஉளைச் சலை பால் நிறுவன அதிகாரி களும் காவல்துறையினரும் மிரட்டி வந்துள்ளளர் என்கின்ற னர்.

அதனால் நவீன், கடந்த ஜூன் 26ம் தேதி ம் தேதி வங்கி பணபரிவர்த்தனைமூலம்5கோடி ரூபாயை திரும்ப கொடுத்தார். பணத்தைத் திரும்ப கொடுத் தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என பால் நிறுவன அதிகாரிகள் இருவர் நவீனை மிரட்டியிருக்கிறார்கள். அதனால் பயந்துபோன நவீன் தன்னுடைய சகோதரிக்கும் பால் நிறுவனத்துக்கும் இ-மெயில் மூலம் தற்கொலை செய்து கொள்ள போகும் தகவலை அனுப்பிவிட்டு விபரீத முடிவை எடுத்திருக்கிறார். சடலமாக மீட்கப்பட்ட நவீனின் கைகள் பின்பக்கமாக கட்டப்பட்டிருப்பதால் அவரின் மரணத்தில் சந்தேகம் இருக் கிறது. நவீனை இந்த முடிவை எடுக்க தூண்டியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

முன்னதாக, நவீன் எழுதிய கடிதத்தில் , என்னுடைய சடலத்திலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இப்போது உங்களால் எதையும் மீட்க முடியாது. எனது மரணம் விரைவில் உங்களை அசைத்துபார்க்கும் என்று கூறியுள்ளார்.

## கோவை மாவட்டத்தில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்

### மக்கள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்



கோவை மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நான்கு கட்டங்களாக நடைபெற உள்ளது. இம்முகாம் தொடர்பாக மாவட்ட கலெக்டர் பவன் குமார் செய்தியாளர்களிடம் பேசும்போது கூறியதாவது, " முதல்வர் மு.க. ஸ்டாலின் வழிகாட்டு தலின்படி, ஊரகமும் நகர்ப்புறமும் சேர்ந்த மக்களுக்குப் பயனளிக் கும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடத்தப் படுகின்றது. இம்முகாம் கோவை மாவட்டம் முழுவதும் நான்கு கட்டங்களாக நடை பெறுகிறது. மொத்தமாக 334 முகாம்கள் அமைகின்றன.

முதல்கட்ட முகாம்கள் ஜூலை பதினைந்து முதல் ஆகஸ்ட் பதினான்கு வரை 120 இடங்களில் நடைபெறும். இரண்டாம் கட்டமாக ஆகஸ்ட் பதினைந்து முதல் செப்டம்பர் பதினான்கு வரை 96 முகாம்கள், மூன் றாம் கட்டமாக செப்டம்பர் பதினைந்து முதல் அக்டோ பர் பதினான்கு வரை 96 முகாம்கள் மற்றும் நான்காம் கட்டமாக அக்டோபர் பதினைந்து முதல் 31ஆம் தேதி வரை 24 முகாம்கள் நடைபெறவுள்ளன.

இம்முகாம்கள் மாநக ராட்சி பகுதியில் 66 இடங்களில், நகராட்சி களில் 50 இடங்களில், பேரூராட்சி களில் 102 இடங்களில் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அருகில் 82 இடங்களில் நடைபெறுகின்றன. முகாம்களில் பங்கேற்க 1,694 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வீடுதோறும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மருத்துவ சேவைகள், மகளிர் நலத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், சொத்து வரி, வரி மாற்றம், குடும்ப அட்டை சேவைகள், மின்னணு சேவை மையங்கள் மற்றும் காவல்துறையின் உதவிக் கண்கள் ஆகியன முகாம்களில் செயல்படுகின்றன.

பொதுமக்கள் இம்முகாம்களை பயன்படுத்திக் கொண்டு தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வுகள் பெற வேண்டும்" என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

## தொழில் துறைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய டாக்ட் சங்கத் தலைவர் ஜேம்ஸ் பாராட்டு விழா தொழிலதிபர்கள் வாழ்த்து



கோவை ஆவாரம் பாளையத்தில் அமைந் துள்ள கோ இந்தியா அரங்கில் வியாழக்கிழமை ஒரு சிறப்பான நிகழ்வு நடைபெற்றது. தொழில் அமைப்புகளின் சார்பில், கடந்த 20 ஆண்டுகளாக தொழில்துறை தொடர்பான பிரச்சனைகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் விடாப்பிடியாக பேசி, தீர்வுகள் கிடைக்காத போதிலும் உறுதியுடன் முயற்சிசெய்து வந்த டாக்ட் சங்க மாவட்டத் தலைவர் ஜேம்சுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழா டாக்ட் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரதாப் சேகர் தலைமையில் நடந்தது. விழாவில் தொழில் துறையை மேம்படுத்தும் பணியில் முக்கிய பங் காற்றிய ஜேம்சுக்கு, "கோவையின் தொழில் தந்தை" என்று அழைக்கப்படும் ஏ.பி. வரதராஜன் நினைவு பரிசை வழங்கி, அவரது பங்களிப்பை பாராட்டினார்.

விழாவில் கொடிசியா தலைவர் கார்த்திகேயன், இந்தியா பம்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் கார்த்திக், சிமா தலைவர் மித்துன் மகேந்திரன் ராமதாஸ், டான்சியா துணைத் தலைவர் சுருளி வேல், கொசிமா தலைவர் நடராஜன், கம்ப்ரசர் சங்கத் தலைவர் ரவீந்திரன் மற்றும் காஸ்மாபேன் தலைவர் சிவ சண் முகசிவா உள்ளிட்ட பல தொழில்துறை முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## ஆகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும் புதிய யுபிஐ விதிகள் பயனர்களுக்குத் தெரிய வேண்டிய முக்கிய மாற்றங்கள்

நம்மில் பெரும்பாலோர் இன்று பணத்தை வைத்திருப் பதைவிட, யுபிஐ வழியே பணம் செலுத்துவதை அதிகம் விரும்புகிறோம். இந்நிலையில், இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் ஆகஸ்ட் 1, 2025 முதல் புதிய விதிகளை அமல்படுத்த இருப்பதாக அறிவித்துள்ளது. இந்த மாற்றங்கள் யுபிஐ பரிவர்த்தனைகளை மேலும் பாதுகாப்பானதும், வேகமானதும், நம்பத்தகுந்ததாகவும் மாற்றுவதே நோக்கமாகக் கொண்டுள்ளன.

புதிய விதிகள் பல முக்கியமான மாற்றங்களை கொண்டுள்ளன. முதலில், கணக்கில் இருப்பைச் சரிபார்ப்பதற்கான வரம்பு 50 முறை என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பயன்பாட்டின் போக்கு வரத்தைக் கட்டுப் படுத்த வும், மென்பொருள் செய லிழப்புகளை தவிர்க்கவும் முடியும். இதேபோல், உங்கள் மொபைல் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை ஒரே நாளில் 25 முறைதான் சரிபார்க்க முடியும்.

அதனைத் தொடர்ந்து, யுபிஐமூலம் நெட்ஃப்லிக்ஸ், எஸ்.ஐ.பி போன்ற தானியங்கி கட்டணங்கள் சில நேர இடைவெளிகளிலேயே செயல்படும். காலையில் 10 மணிக்கு முன், பிற்பகல் 1 மணி முதல் மாலை 5 மணி வரை மற்றும் இரவு 9.30க்குப் பிறகு மட்டுமே இவை செயலில் இருக்கும். இது பரிவர்த்தனை நெருக்கத்தை தவிர்க்கும் வழியாக செயல்படுகிறது.

மேலும், பரிவர்த்தனை நிலை தகவலைப் பார்க்கும் எண்ணிக்கையும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பரிவர்த்தனை நிலையை ஒரு நாளில் அதிகபட்சம் 3 முறைதான் சரிபார்க்க முடியும். ஒவ்வொரு முயற்சிக்கும் இடையில் 90 வினாடிகள் இடைவெளி கட்டாயம் உள்ளது.

இவை தவிர, கடந்த மாதங்களில் மேலும் சில மாற்றங்கள் யுபிஐ அமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜூன் 2025 இல் API பதிலளிக்கும் நேரம் குறைக்கப்பட்டது, இது பரிவர்த்தனைகளை மேலும் வேகமாக்கியது. ஜூன் 30 முதல், பணம் அனுப்பும் முன் பயனாளியின் பெயரை முன்னமே பார்க்கும் வசதி யுபிஐ யில் சேர்க்கப்பட்டது, இது மோசடிகளைத் தவிர்க்க உதவுகிறது. மேலும், டிசம்பர் 2024 இல் NPCI கட்டணம் திரும்பப்பெறும் வரம்பைத் தீர்மானித்தது

ஒரு பயனாளர் 30 நாளில் 10 முறை வரை மட்டுமே பணத்தை திரும்பப்பெறலாம்.

இந்த அனைத்து மாற்றங்களும் யுபிஐ சேவையில் ஏற்பட்ட அதிக சுமை மற்றும் செயலிழப்பு களை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவை. என்பிசிஐ கூறியபடி, மாதந்தோறும் 16 பில்லியன் பரிவர்த்தனைகள் நடக்கின்றன. இது போல அதிக வாடிக்கையாளர்கள் ஒரே நேரத்தில் பலமுறை கணக்கு இருப்பை பார்ப்பது அல்லது ஒரே பரிவர்த்தனையை மீண்டும் செய்யும் பழக்கமே அதிக சுமையை உருவாக்குகிறது. இதனை சமாளிக்கவே புதிய விதிகள் அறிமுகமாகின்றன.

இந்த மாற்றங்கள் நடைமுறையில் வந்ததும், UPI பயனர்கள் மேலும் பாதுகாப்பான மற்றும் சீரான பரிவர்த்தனை அனுபவத்தை பெற முடியும்.

## ஆலியாபட்டிடம் 79 லட்சம் மோசடி...



பாலிவுட் நடிகை ஆலியா பட் நடிப்பு மட்டுமல்லாது படத்தயாரிப்பு கம்பெனியும் வைத்திருக்கிறார். எடர்னல் சன்ஷைன் புரொடக்ஷன் என்ற படத்தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் படங்களையும் தயாரித்து வருகிறார். கடந்த 2021ம் ஆண்டில் இருந்து 2024ம் ஆண்டு வரை வேதிகா நடிகை ஆலியா பட்டிடம் உதவியாளராக இருந்தார். அந்நேரத்தில் ஆலியா பட்டின் நிதி நிர்வாகம், படப்பிடிப்பு விபரம், பணம் வாங்குவது போன்ற வேலைகளை வேதிகா கவனித்து வந்தார். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி போக்குவரத்து செலவு, மீட்டிங் செலவு என பல்வேறு காரணங்களை கூறி போலி பில் தயாரித்து ஆலியா பட்டிடம் கையெ ழுத்து வாங்கி வேதிகா பணத்தை தனது தோழியின் வங்கிக்கணக்கிற்கு மாற்றினார். அதன் பிறகு அப்பணத்தை அங்கிருந்து தனது வங்கிக்கணக்கிற்கு மாற்றிக்கொண்டார். இது போன்று 2022-24ம் ஆண்டு வரை போலி பில் தயாரித்து 76.9 லட்சத்தை வேதிகா மோசடி செய்துள்ளார்.

இந்த மோசடியை ஆலியா பட் தாயார் சோனி ரஸ்தான் கண்டுபிடித்து விட்டார். வேதிகா தயாரித்து கையெழுத்து வாங்கிய பில்கள் அனைத்தும் ஒரிஜினல் போன்று இருந்தது. இது குறித்து சோனிரஸ்தான் போலீஸில் புகார் செய்தார். போலீஸார் வழக்கு பதிவு செய்து வேதிகாவை தேடி வந்தனர். போலீஸார் தேடுவதை அறிந்து கொண்டு வேதிகா தப்பிச்சென்றார். அவர் தொடர்ந்து இடத்தை மாற்றிகொண்டே இருந்தார். முதலில் மும்பையில் இருந்து ராஜஸ்தானுக்கு தப்பிச்சென்றார். அதன் பிறகு அங்கிருந்து கர்நாடகா விற்கு தப்பிச்சென்றார்.

பின்னர் அங்கிருந்து புனேவிற்கும் பின்னர் பெங்களூருக்கும் சென்றார். இதையடுத்து பெங்களூரு சென்ற மும்பை போலீஸார் அவரை கைது செய்து மும்பைக்கு அழைத்து வந்து விசாரித்து வருகின்றனர்.

## நான் துரோகியா? ஒரு பாட்டில் விஷம் வாங்கிக் கொடுங்கள்

### வைகோவுக்கு மல்லை சத்யா பதிலடி

தி கோவை ஹெரால்டு



மதிமுகவின் துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யாவுக்கும், அக்கட்சியின் முதன்மை செயலாளர் துரை வைகோவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டபோது வைகோதான் அண்மையில் இருவரையும் இணைத்து வைத்தார். ஆனால் வைகோவே மல்லை சத்யா இயக் கத்திற்கு எதிராக செயல் படுவதாக குற்றம் சாட்டியுள் ளார். துரோகி என்றும் வைகோ கூறியுள்ளார். இதனால் மல்லை சத்யா மதிமுகவில் இருந்து வெளியேற்றப்படுகிறார் என்ற தகவல் பரவுகிறது. அதற்கேற்றார்போல், பூந்தமல்லியில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்திற்காக வைக்கப்பட்டுள்ள பேனரில் மல்லை சத்யாவின் புகைப் படம் இடம்பெறவில்லை. இது தலைமையின் உத்தரவு என்கிறார்கள்.

இதுதொடர்பாக வைகோ கூறியதாவது, நான் அவரை உடன்பிறவா தம்பியை போல் நடத்தி வந்தேன். அவர் (மல்லை சத்யா) இரண்டு ஆண்டுகளாகவே இயக்கத்துக்கு எதிராக யாரெல்லாம் கட்சியை விட்டு போனார்களோ அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு அவர் களோடு நிகழ்ச்சிகளுக்கு போய் வந்தார். என்னைப் பற்றி மிக மோசமாக பதிவு களை போடக்கூடிய நான் கைந்து பேரோடு நெருக்க மான நட்பு வைத்துக் கொண்டுள்ளார். அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பதிவுகளை போடுகிறார்கள்.

மல்லை சத்யா வெளிநாடுகளுக்கு திருமண நிகழ்சிகளுக்கு எல்லாம் சென்று இரண்டு நாள் தங்கிவிட்டு வந்தார். அவர் 7 முறை வெளிநாடுகளுக்கு போனபோது எந்த இடத்திலும் அவர், மதிமுக துணை பொதுச்செயலாளர் என்று சொல்லவே இல்லை. அவர் என் பெயரைக்கூட சொல்லவில்லை; பரவாயில்லை. ஆனால், தான் மதிமுகவின் துணைப் பொதுச்செயலாளராக இருக்கிறேன் என்று கூட சொல்லவில்லை. தான் மாமல்லபுரம் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் என்று சொல்லி வந்தார். எந்த பயணத்திற்கும் அவர் என்னிடம் சொல்லிவிட்டும் போனதில்லை.

இந்த சூழ்நிலையில் அவர் இயக்கத்திற்கு உள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்தி ஒரு குழுவை உருவாக்க முயன்றார். அது நடக்கவில்லை. ஆகவே தான் அவர் கடைசியாக வெளிநாட்டிற்கு சென்று விட்டு வரும்போதும் மதிமுக பெயரை உச்சரிக்கவில்லை. இந்த உண்மைகளை சொல்லாவிடில் கட்சிக்காரர்களுக்கு தெரியாமல் போய்விடும் என்றுதான் நிர்வாகக்குழுவில் பேசும்போது, அவரை என் தம்பியை போல் நினைத்தேன். ஆனால், அவர் எதிராக செயல்படுகிறார் என்று தெரிவித்தேன்.

அதற்கு அவர், தான் தலித் சகோதரர் என்பதால் இப்படிச் செய்கிறேன் என்று பரவவிட்டார். திராவிட இயக்கத்தில் தலித்து களுக்கு முதன் முதலாக பதவி கொடுத்ததே மதிமுக தான். நான்கு சீட்டில் இரண்டு சீட்டை தலித்துகளுக்கு ஒதுக்கியவன் நான். என் வீட்டில் முழுநேர உதவியாளராக இருந்த தலித் சகோதரர் சந்துருக்கு சொந்த ஊரில் புதுவீடுகட்டிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இவர் இப்படி செய்தி களை பரவ விடுகிறார்.

உளவுத்துறையில் எனக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். அதனால் தான் ஆதாரத்தோடு சொல்கிறேன். அவர் மதிமுகவுக்கு எதிரானவர்களோடு தொடர்பில் இருக்கிறார். அவர் ஏன் இரண்டு ஆண்டுகளாக தலைகீழாக மாறினார்? என்று தெரியவில்லை. இயக்கத்திற்கு மாறுபட்டு நடக்கிறார். இதை என்னால் சகித்துக்கொண்டு இருக்க முடியாது. மல்லை சத்யாவால் இயக்கத்திற்கு எந்த நெருக்கடியும் ஏற்படாது' என்கிறார்.

மல்லை சத்யா பதில் அளிக்கயில், 'தமிழ்சங்கம் சார்பான வெளிநாட்டு நிகழ்ச்சிக்கும் கூட கரை வேட்டி கட்டித்தான் சென்றேன். வைகோ அவர்கள் சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. என் மீது இப்படி ஒரு பழியை சுமத்துவார் என்று கனவிலும் நினைக்கவில்லை. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கட்சியில் 32 ஆண்டுகளாக உண்மையாக இருந்து வருகிறேன். என் மீது இப்படி ஒரு குற்றச்சாட்டை வைப்பதற்கு பதிலாக ஒரு பாட்டில் விஷம் வாங்கி குடி என்று சொன்னால் கூட குடித்துவிட்டு இறந்துவிடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

## மகனுக்கு பதில் தாய்... பா.ம.க மேடை ஏறிய ராமதாஸ் மகள்



இதுதான் பாமக; நான் தான் பாமக தலைவர் என்று சொல்லி வரும் ராமதாஸ் பின்னால் ஒரு கூட்டம் திரண்டு நிற்கிறது. அன்புமணியும் இதையே கூறி வருகிறார். அவர் பின்னாலும் ஒரு கூட்டம் திரண்டு நிற் கிறது. இதில் எது உண்மை யான பாமக? யார் உண்மையான பாமக தலைவர்? என்பதில் பாமக வினரிடையே குழப்பம் நீடித்து வருகிறது.

இப்படி குழப்பக்கத் துக் கிடையே, பாமக செயற்குழு கூட்டம் திண்டி வனம் அடுத்த ஓமந்தூர் தனியார் திருமண மண்ட பத்தில் நடந்தது.

ராமதாஸ், ஜி.கே.மணி, ஏ.கே.மூர்த்தி, அருள் உள் ளிட்டோர் இந்த செயற்குழு குழுவில் பங்கேற்றனர். ராமதாசின் மூத்த மகள் காந்திமதி இந்த செயற்குழு மேடை யில் இருந்தது பலரையும் வியக்க வைத்தது.

கூட்டணி குறித்து முடி வெடுக்கும் அதிகாரம், அன்புமணி மீது நடவ டிக்கை எடுக்கின்ற அதிகாரம், தேர்தலில் போட்டியிடு பவர்களுக்கு ஏ மற்றும் பி பார்ம் விண்ணப்பத்தில் கையெழுத்திடும் அதி காரம், ராமதாசுக்குத்தான் என்பன உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்த செயற்குழுவுக்கு வந்திருந்த ராமதாசின் மூத்த மகள் காந்திமதி மேடைக்கு கீழே அமர்ந்திருந்தார். அவரை ராமதாஸ் அழைத்து மேடையில் அமரவைத்தது அரங்கத்தில் வியப்பை ஏற்படுத்திய.

வன்னியர் சங்க மாநாட்டில் காந்திமதி மகன் முகுந்தனுக்குதான் மேடையில் நாற்காலி ஒதுக்க முடியாது என்று அன்புமணி கறார் காட்டி யதும் இதனால் ராமதாஸ் மேடையில் வெடித்ததும் குறிப்பிடத்தக்கது.

காந்திமதியின் மகன் முகுந்தனை பாமகவின் இளைஞரணி தலைவராக நியமனம் செய்தபோதுதான் ராமதாஸ் அன்புமணி இடையே மோதல் உச்சக்கட்டமானது இந்நிலையில் காந்திமதியை செயற்குழுவுக்கு வரச்சொன்னதோடு அல்லாமல் மேடையேற்றி இருக்கிறார் என்றால் அன்புமணியிடம் இருக்கும் செயல் தலைவர் பதவியை பறித்து காந்திமதிக்கு கொடுக்கப்போகிறார் என்றும் சொல்கிறார்கள்.

இதற்கிடையில் பாமகவின் சட்டவிதிகளின் படி ராமதாஸ் நடத்திய பாமக செயற்குழு கூட்டம் செல்லாது.

பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்குத்தான் அதிகாரம் உள்ளது என்றும் பனை யூரில் நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டி அன்புமணி தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

# லபுபு பொம்மைகள் இளைஞர்களை கவர்ந்த புதுமையான பொம்மைகள்



சமீபத்தில் உலகம் முழுவதும் அறியப்பட்டு வருவதும், இளம் தலைமுறையின் பெரும் விருப்பமாக மாறியுள்ளதும் லபுபு எனும் சிறிய பொம்மைகள் ஆகும். குறும்பும், தனித்துவமான அழகும் ஒருங்கிணைந்த தோற்றத்துடன் உள்ளஇந்தலபுபுபொம்மைகள், பார்வையாளர்களின் கவனத்தை பெற்றுள்ளன.

இந்த பொம்மைகளை உருவாக்கியவர் சீனாவின் வாங் நிங் என்பவர். இவர் உருவாக்கிய பாப் மார்ட் என்ற நிறுவனத்தின் மூலம் Labubu உருவானது. இந்த நிறுவனத்தின் "மூடுப் பெட்டி" என்ற விற்பனை முறையில், பொம்மைகள் மூடிய பெட்டியில் வைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. அதைத் திறக்கும் வரை உள்ளதேன்என்பதைஅறிய இயலாது. இதன் மூலம் ஒரு வகையான ஆச்சரியம் மற்றும் எதிர்பார்ப்பு உருவாகிறது. இதுவே Labubu பொம்மைகளை பெரிதும் பிரபலமாக்கியுள்ளது.

பிளாக்பிங்க் இசைக் குழுவின் பாடகி லிசா லபுபு பொம்மைகளை வாங்கி சமூகஊடகங்களில்பகிர்ந்ததையடுத்து, கொரியாவில் இளையர்கள் அதனை விரும்பத் தொடங்கினர். இந்தியாவில் நடிகைகள் அனன்யா பாண்டே மற்றும் ஷர்வாரி வாக் லபுபு பொம்மைகளைப் பயன்படுத்தி புகைப்படங்களை வெளியிட்டதால், இந்திய இளையர்களிடமும் இது விருப்பமாக மாறியுள்ளது.

லபுபு பொம்மைகள் சில நிமிடங்களில் விற்றுவிடும் அளவுக்கு விரைவாகக் காலியாகும். இதனால், இப்பொம்மையைவாங்கும் முயற்சி ஒரு சவாலாகவே மாறியுள்ளது.

இந்தியாவில் லபுபு பொம்மைகளை விற்பனை செய்யும் நிறுவனங்களில் சிலர் பிளாஸ் மார்ட், ஸ்டைல் ஹக், பூன்கள் பாக்ஸ், கலாவட்டம், பாப்பட் ஸ்டோர், இனாபாக்ஸ் மார்க்கெட், டவுன்டவுன் பேஸ், பிரதானம் பேழை மற்றும் சிறுபெட்டி இந்தியா போன்றவை ஆவன. இவை அனைத்தும் இணையவழி சந்தைகளில் கிடைக்கும். லாபுபு பொம்மைகளின் ஆரம்ப விலை சுமார் ₹2,299 ஆகும், எனவே ஆர்வமுள்ளோர் இவற்றை நேரடியாக இணையத்தில் ஆர்டர் செய்து பெறலாம்.

FOR NEWS Publication
9244317182
04223147962

# 2027குள் புல்லட் ரயில் இயக்கம் வரும் 5 ஆண்டுகளில் 1,000 புதிய ரயில்கள்

நியூடெல்லி: இந்திய ரயில்வே வளர்ச்சியில் முக்கியமான படியாக, வரும் ஐந்து ஆண்டுகளில் 1,000 புதிய ரயில்களை அறிமுகப்படுத்தவும், 2027ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் முதல் புல்லட் ரயிலை இயக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பில், ரயில்வே துறையின் பரந்தளவான மேம்பாட்டு முயற்சிகளை அவர் விளக்கியுள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் மட்டும் 35,000 கிலோமீட்டர் புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இது முந்தைய காலக்கட்டங்களில் நடந்த முன்னேற்றங்களை விட பல மடங்கு அதிகம் என்றும் தெரிவித்தார். இந்த முன்னேற்றங்கள் இந்தியாவின் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியையும் விரைவுபடுத்துகின்றன என்று அவர் கூறினார்.

புல்லட் ரயில் திட்டம் இந்திய ரயில்வேயின் மிக முக்கியமான அதிவேக பயணத் திட்டமாக திகழ்கிறது. ஜப்பானின் ஒத்துழைப்பில் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தின் முதல் முன்மாதிரி ரயில் 2026ல் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் 2027ல் அதன் சேவை தொடங்கப்படும். இந்த திட்டத்தில், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான பணிகளை ஐஐடி மெட்ராஸ் மற்றும் ஐஐடி ரூர்க்கி ஆகியவை மேற்கொண்டு வருகின்றன.

மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் பாதைக்காக, குஜராத்தில் உள்ள வல்சாத் மாவட்டத்தில் டாமன் கங்கா நதியின் மீது முக்கிய நதி பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது, மாநிலத்தில் திட்டமிடப்பட்ட 21 நதி பாலங்களில் பதினாறாவது பாலமாகும். குறிப்பாக வல்சாத் பகுதியில் உள்ள ஐந்து நதிபாலங்களும் தற்போது பூர்த்தியாகியுள்ளன.

இந்திய ரயில்வே வளர்ச்சியின் ஒருபகுதியாக, வருடத்திற்கு சுமார் 30,000 ரயில் வேகன்கள் மற்றும் 1,500 என்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன. இது வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைந்த உற்பத்தியைவிட அதிக அளவிலான உற்பத்தியை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

முன்னதாக ரூ.25,000 கோடியாக இருந்த ரயில்வே முதலீடு தற்போது ரூ.2.52 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாகவும், மேலும் ரூ.20,000 கோடி பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புகளாக பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கேரள பள்ளிகளில் மாற்றியமைக்கப்பட்ட கேரள பள்ளிகளில் மாணவர்கள் அமரும் விதம்

திரைப்படம் ஒன்றின் நேரடி தாக்கமாக, கேரளா மாநிலபள்ளிகளில்மாணவர்கள் வகுப்பறையில் அமரும் விதத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

2023 ஆண்டு இறுதியில் வெளியான 'ஸ்தானார்த்தி ஸ்ரீகுட்டன்' என்ற திரைப்படம், இயக்குநர் வினேஷ் விஸ்வநாத் மூலம் உருவாகி, ஒரு கிராமப்புற அரசு பள்ளியில் மாணவர் சங்கத் தேர்தலை மையமாகக் கொண்டு கதை நகர்கிறது. இப்படத்தில் இடம்பெற்ற ஒரு முக்கிய காட்சி கல்வித் துறையில் புதிய கலந்தாய்வை தூண்டியுள்ளது.

முன்னதாக, பள்ளிகளில்திறமையானமாணவர்கள் முதல் வரிசையில், மற்றும்படிப்பில்பின்தங்கிய மாணவர்கள் பின்தட்டில் அமர்வது வழக்கம். இப்படியான அமர்வு முறை மாணவர்களிடையே மனவுறுப்பு, ஒதுக்குபாடு போன்ற எண்ணங்களை ஏற்படுத்தும் என பலரும் விமர்சனம்செய்துவந்தனர்.

இந்த சிந்தனையை எதிர்த்து, திரைப்படத்தில் மாணவர்கள் வகுப்பறையில் அரை வட்ட வடிவில் அமருமாறு காட்சி இடப்பட்டது. அனைவரும் ஆசிரியரை சமமான தொலைவில் எதிர்நோக்கி அமர்வதன்மூலம், ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கப்படுகிறது.

இந்த காட்சி சமூக வட்டாரங்களிலும் கல்வி முறையிலும் நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து, தற்போது கேரளாவின் பல்வேறு பள்ளிகளிலும் அரை வட்ட அமர்வு முறை நடைமுறையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

# கோவையின் முழுமை திட்டத்துக்கு வாழ்த்து தெரிவித்த ஃபைரா



தி கோவை ஹெரால்டு

கோவை மக்களின் 30 ஆண்டு கால கனவை நினைவாக்கிடும் வகையில் கோவை இரண்டாவது முழுமை திட்டத்தை வெளியிட்டமைக்கு தேசியத் தலைவர் டாக்டர் ஹென்றி ஆலோசனையின் பேரில் தேசிய செயல் செயலாளர் லயன் ச செந்தில்குமார் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு சு முத்துசாமியை சந்தித்து வாழ்த்து தெரிவித்து நினைவு பரிசு வழங்கினர்.

அருகில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, ஃபைரா தேசிய மாநில நிர்வாகிகள், தேசிய துணைச் செயலாளர் பால சண்முகம் என்கின்ற கண்ணன், தேசிய இணை செயலாளர் லயன் பாலசுப்பிரமணி, மாநில துணைத்தலைவர் லயன் ராமநாதன், மாநிலத் துணைத் தலைவர் ஆர்கிடெக் முரளிதரன், மாவட்டத் தலைவர் லே-அவுட் ஓனர்ஸ் லயன் வில்சன் பி தாமஸ், கோவைமண்டலதலைமை நிலைய செயலாளர் லயன் கிருஷ்ணமூர்த்தி, கோவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர், குருடம்பாளையம் முன்னாள்கவுன்சிலர் லயன் வளர்மதி, அய்யப்பன், சந்திரசேகர், லயன் கிரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# கோவையில் பாதுகாப்பில்லாத உணவு கோயம்புத்தூர் கன்ஸ்யூமர் வாய்ஸ் லோகு புகார்

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் பொறுப்பு அபிராமி தலைமையில் நடைபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி உதவி இயக்குனர் கமலக் கண்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள், மின்வாரியம், பள்ளிக்கல்வி உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் பேசிய கோயம்புத்தூர் கன்ஸ்யூமர் வாய்ஸ் லோகு கோவை நகரில்தங்கும்விடுதிகளுக்கு வீட்டு வரி போடப்படுகிறது. இதை மாற்ற வேண்டும். நகரில் பெரும்பாலான உணவுகடை ஓட்டல்களில் பிளாஸ்டிக் பேப்பர் உணவுகளை பார்சல் கட்டி தருகிறார்கள். பரோட்டா குரு மாவில் அஜினமோட்டோ, லெமன் சால்ட் ஆகியவை சேர்க்கப்படுகிறது. சரவணம்பட்டி, பீளமேடு, காளப்பட்டி, கீரணத்தம், கணபதி பகுதிகளில் இப்படி சுவைகூட்டும் உணவுகளை விற்பனை செய்கிறார்கள். இணைய வழியில் புகார் கூறினாலும் நடவடிக்கை எடுப்பதில்லை என்று புகார் தெரிவித்தார்.

# சாலையோர குப்பை வீச்சைத் தடுக்க சிசிடிவி கண்காணிப்பு மாநகராட்சி ஆணையரின் உத்தரவு

கோவை மாநகரில் குப்பை தொட்டிகள் அகற்றப்பட்டு ஓராண்டை கடந்தநிலையில், மக்களால் சாலையோரங்களில் குப்பை சிதறடிக்கும் செயல்கள் தொடர்வதால், மாநகராட்சி சிக்கனமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மக்கள் தங்கள் வீடுகளுக்கு தினமும் வருவாரான தூய்மை பணியாளர்களிடம் குப்பைகளைமக்கும்மற்றும் மக்காதவகைகளாகபிரித்து ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், பெரும்பாலான இடங்களில் இதற்கான நடைமுறை காணப்படவில்லை.

இதன் விளைவாக சாலைகளில் குப்பைகள் சிதறி உள்ளமை நிலவுகிறது.

இல்லத்தரசிகள் இரவு நேரங்களில் பழைய குப்பைதொட்டிகள் இருந்த இடங்களில் குப்பையைக் கொட்டி செல்வதுடன், குடும்பத் தலைவர்கள் காலை நேரங்களில் பிளாஸ்டிக் கவர்களில் குப்பையை எடுத்து வந்து போக்கில் வீசிவிட்டு செல்லும் சம்பவங்களும் நடந்து வருகின்றன.

இதனைகட்டுப்படுத்தும் நோக்கத்தில், இவ்விதமான விதிமீறல்கள் நடைபெறும் இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தி கண்காணிக்க கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார். மேலும், தொடர்ந்து சாலையோரங்களில்குப்பை கொட்டப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

இன்று மாநகராட்சி மேற்குமண்டலபகுதிகளில் தூய்மை பணிகள் நடைபெறும்சூழலைநேரில் பார்வையிட்ட ஆணையர், கோவில் மேடு மற்றும் திலகர் நகர் பகுதிகளில் சாலையோரங்களில் குப்பைகள் தவறாக கொட்டப்பட்டுள்ளதை ஆய்வு செய்தார். அதையடுத்து, அங்கு சிசிடிவி கேமரா பொருத்தி கண்காணிக்கவும், விதிமீறுவோருக்கு அபராதம் விதிக்கவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வுஏற்படுத்தவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்பே சரவணம்பட்டி, காட்டூர், ராம்நகர், சோமசுந்தரா மில் ரோடு, சிங்காநல்லூர்வெள்ளலூர் சாலை, கள்ளிமடை காமாட்சியம்மன் கோவில் பின்புறம், நஞ்சப்பா நகர் மற்றும் நஞ்சுண்டாபுரம் ரயில்வே பாலம் பகுதியில் இத்தகைய குப்பை வீச்சு நடவடிக்கைகள் பரவலாக காணப்பட்டுள்ளதால், அங்கும் சிசிடிவி கேமரா பொருத்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப் படுகிறது.

# கேசத்தை விளக்காக ஏற்றிய கணம்புல்லர்

அறுபத்து மூன்று நாயன்மார்களும்சிவபெருமானுக்குஒவ்வொரு வகையில் ஒப்பற்ற தொண்டு செய்துள்ளனர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய கணம்புல்ல நாயனார், சிறுவயது முதலே சிவபெருமான் மீது அளவு கடந்தபக்தியைக்கொண்டிருந்தார். சிவாலயங்களில்சிவபெருமானுக்கு நெய் விளக்கு ஏற்றும் பணியை தமது தலையாய பணியாக கொண்டு செய்து வந்தார்.



வறுமை வரும் காலத்து, இவர், கணம்புல்லை விற்று நெய் வாங்கி தீபமேற்றினார். ஒருநாள் புல்லும் விற்காதுபோக விளக்கெரிக்கப் பணமின்றி அப்புற்களைத் திரியாக்கி விளக்கெரித்தார். அப்புற்களும் விளக்கெரிக்கப் போதாது தன் தலைமுடியைத் திரியாக்கி விளக்கெரித்தப் பொழுது சிவபெருமான் பெருங்கருணை செய்தருள, கணம்புல்ல நாயனார் சிவலோகப் பதவியை அடைந்தார்.

கணம்புல்ல நாயனார் சோழவள நாட்டில் உள்ள வட வெள்ளாற்றின் தென்கரையிலே அமைந்துள்ள இருக்குவேளூர் (இந்நாளில் பேளூர் என்றழைக்கப்படுகிறது. இது சேலம் ஆத்தூர் சாலையில் வாழப்பாடிக்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது) என்னும் தலத்திலே செங்குந்தர் மரபில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் என்னவென்பது தெரியவில்லை. பிறப்பிலேயே செல்வவளம் மிக்கவர். இவர் ஏழை எளியோருக்கு தான தருமங்கள், கோவில் திருப்பணிகளுக்கு உதவிகள் என பல்வேறு சேவைகளைச் செய்து வந்தார். இதனால் அங்கிருந்த மக்களுக்கு ஒப்பற்ற தலைவராய்விளங்கினார். சிறுவயது முதலே சிவபெருமான் மீது அளவு கடந்த பக்தியைக் கொண்டிருந்தார். சிவாலயங்களில் சிவபெருமானுக்கு நெய் விளக்கு ஏற்றும் பணியை தமது தலையாய பணியாக கொண்டுசெய்துவந்தார். எத்தகைய பணியிலும் நெய் தீபம் ஏற்றும் பணியை மட்டும் விடாது செய்துவந்தார். இவருடைய அன்பினால் மகிழ்ந்த சிவபெருமான் இவரை சோதிக்கும் பொருட்டு இவருக்கு வறுமையை உண்டாக்கினார்.

கணம்புல்ல நாயனார் எத்தகைய வறுமை வந்தாலும் விளக்கேற்றுவதை மனம் தளராமல் மகிழ்வுடன் செய்துவந்தார்.

கோயில்களுக்குஒளிஏற்றுவதால் இருளடைந்தமானிடப்பிறவிஎன்னும் அஞ்ஞானஇருள்நீங்கிஅருளுடைய ஞான இன்ப வீட்டை அடைய வழி பிறக்கும் என்பதனை உணர்ந்து நற்பணி செய்து வந்த கணம்புல்ல நாயனாருக்குச் செல்வம் குறைந்து வறுமை வளரத் தொடங்கியது. அந்த நிலையிலும் திருவிளக்கு ஏற்றும் பணியைத் தவறாமல் செய்து வந்தார். வறுமையின் நிலைதொடரவேஇருக்குவேளூரில் உள்ள நிலபுலன்களை விற்று கையில் கிடைத்த பணத்தோடு சிவாலயங்களுக்குச் சென்று நெய் தீபம் ஏற்ற ஊரை விட்டு வெளியேறி இறுதியாக தில்லையை (சிதம்பரம்) வந்தடைந்தார்.

தில்லையம்பதியை விட்டுச் செல்ல மனமில்லாத கணம்புல்ல நாயனார் அவ்வூரில் தனியாக வீடு எடுத்து வசிக்கலானார் .

தில்லைத் திருவிடத்தில் அமைந்துள்ள திருப்புலீச்சரம் என்னும் சிவாலயத்தில் அன்றாடம் விளக்கேற்றும் பணியை செய்துவந்தார். கையில் இருந்த செல்வங்கள் குறையலாயிற்று. அதைப்பற்றி கவலைப்படாத கணம்புல்லர் கண்ணும் கருத்துமாய் தன்னுடைய விளக்கேற்றும் பணியில் இன்புற்றிருந்தார்.

கணம்புல்ல நாயனார் கையில் இருந்த செல்வமும், வீட்டில் இருந்த பொருள்களும் விளக்கேற்றும் பணியில் முழுவதுமாக கரைந்துவிட்டது. விற்பதற்குக் கூட மேற்கொண்டு மனையில் பொருள் இல்லையே என்ற நிலை ஏற்பட்டதும் நாயனார் ஊராரிடம் இரப்பதற்கு அஞ்சிய நிலையில் உடல் உழைப்பினால் செல்வம் சேர்க்கக் கருதினார். தமது உடல் முயற்சியினால் வீடுகளில் கூரை வேய்வதற்கென கணம் எனும் ஒருவகை புல்லை அரிந்து வந்து அவற்றைவிற்றுபணமாக்கிநெய் வாங்கி விளக்கேற்றி வந்தார். கணம் புல்லை விற்று வந்ததால் அவரை எல்லாரும் கணம்புல்லர் என அழைத்தனர்.

சிவபெருமான்திருவிளையாடலால் ஒரு நாள் அவரது கையில் இருந்த கணம்புல் எதுவும் விற்பனையாகவில்லை. அதனால், அந்தப் புற்களை திரித்து விளக்குகள் ஏற்றினார். விளக்கில் தன் திருமுடியினை திரியாக்கி ஏற்றினார்: கோயில்களில் விளக்குகள் பெரும்பாலும் ஜாமம் வரைக்கும் எரிவது வழக்கம். ஆனால் நீடித்து ஜாமம் வரை எரியும் விளக்குகள் புற்களை திரித்து ஏற்றியதால் விரைவில் அணைய தொடங்கின.

சிவபெருமானின் மீது கொண்ட பக்தியால் கணம்புல்ல நாயனார் சற்றும் யோசிக்காமல், விளக்குகள் அணைந்து விடக் கூடாதே என்ற பதற்றத்தால், தனது தலைமுடியை அவிழ்த்துவிட்டு திரியாக்கி ஏற்றினார். திருப்புலீச்சரத்து சிவபெருமான் அதற்குமேல் அவரை சோதிக்க விரும்பவில்லை. சிவபெருமான் ரிஷப வாகனத்தில் பார்வதிசமேதராக தரிசனம் தந்தார். அளவற்ற மகிழ்ச்சியில் அவர்தம் பாதம் பணிந்த கணம்புல்ல நாயனாருக்கு சிவலோக பதவி அளித்து அருளினார்.

# கோவைக்கு மாஸ்டர் பிளான் 2 முதல்வருக்கு பல்சமய நல்லுறவு இயக்கம் நன்றி

தி கோவை ஹெரால்டு



கோவைக்கு மாஸ்டர் பிளான் கொண்டு வந்து, பிளானிங்கில் மாஸ்டராக திகழும், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பல்சமய நல்லுறவு இயக்கத்தின் தலைவர் முகமது ரஃபி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று கோவையை அழைப்பார்கள். நூற்பாலைகள், சிறுகுறு தொழில்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், மென்பொருள் நிறுவனங்கள்என, அனைத்துதொழில்களும் கோவையில் செழித்து வளர்கிறது. இதனால், கோவைஅடுத்த கட்டவளர்ச்சிநோக்கிநகர வேண்டியுள்ளது. அதற்கு முத்தாய்ப்பானதிட்டமாக, தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் வகுத்துள்ள திட்டமே மாஸ்டர் பிளான் 2. இத்திட்டத்தின் வாயிலாக, உலகத்தில் உள்ள முன்னணி நகரங்களுக்கு நிகரான நகரமாக கோவை வளரும். மாஸ்டர் பிளான் செயலாக்கத்தின் வாயிலாக, பல்வேறு துறைகள் அபரிவிதமான வளர்ச்சி அடையும். இதனால் கோவையில் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை, அனைவரும் வேலை வாய்ப்பைபெறலாம். நவீன அறிவியல் உலகத்திற்கு ஏற்ற வகையில், 2041 ஆம் ஆண்டுக்கான மாஸ்டர் பிளான் திட்டம் வகுத்திருப்பது, கோவையை இந்தியாவில் முன்மாதிரி நகரமாக மாற்றும் முயற்சி என்றே நாங்கள் நம்புகிறோம். நகர்ப்புறம், கிராமப்புறம் என பலதரப்பட்ட கட்டமைப்பை உள்ளடக்கிய கோயம்புத்தூருக்கு, சரியான நேரத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் மாஸ்டர் பிளான் அறிவித்துள்ளார். பல்வேறு சிறந்த பிளான்களை வகுத்த, பிளான்களின் மாஸ்டர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோவை மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என்றே உணர்கிறோம். மாஸ்டர் பிளான் 2, கோவை வளர்ச்சிக்கு ஒரு பெரும் மைல்கல்லாகவே பார்க்கின்றோம் வரலாறு பேசும் மாஸ்டர் பிளான் 2 வெளியிட்ட முதல்வருக்கு, பல் சமய நல்லுறவு இயக்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோவை வ.உ.சி. மைதனாத்தில் நடைபெற்று வரும் ஜெமினி கிராண்ட் சர்க்கஸில் பார்வையாளர்களை கவர்ந்து மெய்சிலிர்க் கும் காட்சிகள்.

# தர்மலிங்கேஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேக விழா





தி கோவை ஹெரால்டு

கோவைமாவட்டம்மதுக்கரை அருகே மரப்பாலம் பகுதியில் உள்ளதர்மலிங்கேஸ்வரர்கோவிலில், புனரமைப்புப் பணிகள் நல்லறம் அறக்கட்டளை சார்பில் அதன் தலைவர் எஸ்.பி.அன்பரசன்தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

விழா ஜூலை 7ஆம் தேதி தொடங்கி, இதற்கான சிறப்பு பூஜைகள், வேள்விகள், மற்றும் ஆன்மிக நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

விழாவில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, கோவை மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன், பேரூர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் ராமானந்த குமரகுருபர சுவாமிகள்,முன்னாள்சட்டமன்ற உறுப்பினர் எட்டிமடை சண்முகம், மருத்துவர் விவேக் அன்பரசன், முந்திரி கோபால், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கும்பாபிஷேக நாளில் திருப்பள்ளி எழுச்சி, திருமஞ்சனம், வேள்விகள், பேரொளி வழிபாடு, திருமுறை இசை, நாட்டியம்,ஆனைந்தாட்டல்,காப்பணிவித்தல்,திருக்குடபுறப்பாடு உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவற்றையடுத்து, ராஜகோபுரம்,விமானங்கள்,பரிவாரங்கள் மற்றும் மூலமூர்த்திகளுக்கு வெப்பநீர் அபிஷேகமாக கும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறியது.

இந்த கும்பாபிஷேகத்தை மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளை செயலாளர் குமரலிங்கம் நடத்தி வைத்தார். பல்லாயிரக்கணக்கானபக்தர்கள் இதில் கலந்து கொண்டு இறை அருளைப் பெற்றனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டு விவாத நிகழ்ச்சி



கோயம்புத்தூர் அனைத்து பெண் தொழில் முனைவோர்கள் சங்கம், ஸ்ரீ ராமகிருஷ்ணாகலைமற்றும் அறிவியல் கல்லூரியின் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் ஆகியவை இணைந்துநடத்திய, "கா◌ஃபி வித்கலெக்டர்" என்றபெண் தொழில்முனைவோர்கள் மேம்பாட்டு குழு விவாத நிகழ்ச்சி, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார்.

கோவை மாவட்ட ஆட்சியர்பவன்குமார்ஜி.கிரியப்பனவர்ஐ.ஏ.எஸ்.,பெண் தொழில்முனைவோர்கள் மேம்பாட்டு குழு விவாத நிகழ்ச்சிக்கு, சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டு பெண் தொழில்முனைவோர்கள், மற்றும் மாணவிகளின் பல்வேறு கேள்விகளுக்குஅவர்பதிலளித்தார்.

அதைத்தொடர்ந்து பெண்தொழில்முனைவோர்களாகச் சாதனைப் படைத்து வரும், மார்ட்டின் குழும நிறுவனங்களின் இயக்குநர் லீமா ரோஸ் மார்ட்டின், பார்க் கல்வி நிறுவனங்களில் தலைமை செயல்அலுவலர் முனைவர் அனுஷாரவி, சங்கரா கல்வி நிறுவனங்களின் துணை இணை இயக்குநர் நித்யா ராமச்சந்திரன், ஐஸ்வர்யா கருத்தரித்தல் மற்றும் பெண்கள் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் எஸ். சந்திரலேகா, கௌமாரம் பிரசாந்தி அகாடமி நிறுவனர் மற்றும் இயக்குநர் தீபா மோகன்ராஜ், அப்பல்லோ ஜவரிடென்டல் மருத்துவ இயக்குநர் டாக்டர் காயத்ரி நடராஜன், கோ கிலாம் ஷாப்பிங் எக்ஸிபிசன் தலைமை செயல் அலுவலர் ஹீனா ராகுல்ஆகியோருக்குவிருதுகள் வழங்கிகௌரவித்தார்.

நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் அனைத்து பெண் தொழில்முனைவோர்கள் சங்க நிறுவனர் முனைவர் ராதா பெள்ளன், ரீவா என்ஜினீயரிங் நிறுவன நிர்வாக பங்குதாரர் எம். இந்திரா, தாவ் டிசைனர்ஸ் நிறுவன உரிமையாளர் தாரா பிரசாத், கே.எம்.எஸ். இன்டஸ்டிரீஸ் சுவிதா மற்றும் பெண் தொழில்முனைவோர்கள், மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக அனைத்து பெண்தொழில்முனைவோர் சங்க இணைச் செயலர் ஸ்மிதா வரவேற்றார். முடிவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி பெண்கள் மேம்பாட்டு மைய உறுப்பினர் மாணவி அபர்ணா நன்றி கூறினார்.

# கேஎம்சிஹெச் மருத்துவமனை 9 விருதுகள் வென்று சாதனை

தி கோவை ஹெரால்டு



▸ பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் டிஜிட்டல் பதிப்பாசிரியர் ரோஷன் போவையாவிடமிருந்து கே.எம்.சி.எச். நிறுவனத்தின் சந்தைத் துறை துணைத் தலைவர் ஆர். நாராயணன் சிறந்த மருத்துவமனைக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

முன்னணி பல்துறை மருத்துவமனையான கேஎம்சிஹெச், புது டெல்லியில் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சார்பில் நடைபெற்ற எ◌ஃப்இ ஹெல்த்கேர் உச்சிமாநாடு மற்றும் விருதுகள் 2025 விழாவில் பல்வேறு பிரிவுகளில் மொத்தம் ஒன்பது விருதுகளை வென்றுள்ளது. கேஎம்சிஹெச் மார்க்கெட்டிங் துணைத் தலைவர் நாராயணன் மருத்துவமனை சார்பாக விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

கேஎம்சிஹெச் மருத்துவமனைக்கு பல்துறை மருத்துவ சேவையில் சிறப்பான செயல்திறன், புற்றுநோய் மருத்துவத்தில் சிறப்பான செயல்திறன், இருதய நோய் சிகிச்சையில் சிறப்பான செயல்திறன், சிறுநீரக சிகிச்சையில் சிறப்பான செயல்திறன், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்திறன் ஆகிய தேசிய அளவிலான விருதுகளும், அவசரகால மற்றும் தீவிர சிகிச்சையில் சிறப்பான செயல்திறன், நரம்பியல் மற்றும் நரம்பியல் அறிவியல் சிகிச்சையில் சிறப்பான செயல்திறன், தாய் - சேய் பராமரிப்பில் சிறப்பான செயல்திறன், இரைப்பை, குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சையில் சிறப்பான செயல்திறன் ஆகிய தென்னிந்திய அளவிலான விருதுகளும் வழங்கப்பட்டன.

இதுதொடர்பாக கேஎம்சிஹெச் தலைவர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி கூறியதாவது, "எ◌ஃப்இ ஹெல்த்கேர் உச்சிமாநாடு மற்றும் விருதுகளில் கிடைத்த இந்த தனிச்சிறப்பான அங்கீகாரத்தால் நாங்கள் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். இந்த ஒன்பது விருதுகள் கேஎம்சிஹெச் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினராலும் வழங்கப்படும் அயராத அர்ப்பணிப்பு, நிபுணத்துவம் மற்றும் கனிவான சேவைக்கான சான்றாகும். இது சமூகத்திற்கு மிக உயர்ந்த தரத்தில் சேவை செய்வதற்கு எங்களின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது." என்றார்.

கே.எம்.சி.ஹெச் செயல் இயக்குநர் டாக்டர் அருண்என்.பழனிசாமி, தேசிய மற்றும் தென்னிந்திய அளவில் பல சிறப்புப் பிரிவுகளில் அங்கீகரிக்கப்படுவது எங்களின் விரிவான திறன்கள் மற்றும் நோயாளி சார்ந்த அணுகுமுறைகு சான்றாக விளங்குகிறது இந்த கௌரவத்திற்காக◌ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விருதுகளை எங்கள்மீது நம்பிக்கை வைத்துள்ள நோயாளிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அர்ப்பணிக்கிறோம். அவர்களின் ஆழ்ந்த நம்பிக்கையே தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான எங்களது உந்துசக்தியாகும்" என்று தெரிவித்தார்.

# கோவையில் தொடங்கிய 'அக்ரி இன்டெக்ஸ் 2025' சர்வதேச வேளாண் கண்காட்சி

தி கோவை ஹெரால்டு



கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெறும் ஐந்து நாள் 'அக்ரி இன்டெக்ஸ் 2025' சர்வதேச வேளாண் வர்த்தகக் கண்காட்சி துவங்கியது. கண்காட்சியை பாரதிய வித்யா பவன் தலைவர் கிருஷ்ணராஜ்வாணவராயர் துவக்கி வைத்தார்.

துவக்கவிழாவில் உரையாற்றிய கிருஷ்ணராஜ் வாணவராயர், "உணவுத் தன்னிறைவு இந்தியா பெற்றுவிட்ட நிலையில், விவசாயியின் வாழ்வாதாரம் மட்டும் சவாலாகவே தொடர்கிறது. 1991ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தங்களில் முதலில் வேளாண் துறையைக் கவனித்திருக்கவேண்டியது தவறவிட்ட முடிவாகும். தற்போது கிராமங்களை தன்னிறைவு பெறும் வகையில் நகர்த்த வேண்டும்" என்றுவலியுறுத்தினார்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் (பொ) தமிழ் வேந்தன், "விடுதலைக்குப் பிறகு இந்தியாவின் உணவு உற்பத்தி 51 மில்லியன் டன்னிலிருந்து தற்போது 354 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இது நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் அறிவியல் முன்னேற்றத்தின் வெளிப்பாடு.

தமிழ்நாடு வேளாண் பல்கலை 948 புதிய பயிர் ரகங்களும், 1,500 தொழில்நுட்பங்களும், 117 பண்ணைக் கருவிகளும் அறிமுகப்படுத்தியுள்ளது. 'கிளைமேட் ஸ்மார்ட் வில்லேஜ்' திட்டம் மூலம் எதிர்கால பருவநிலை மாற்றத்துக்கு தயாராகும் வகையில் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன," என்றார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதன்மை விஞ்ஞானி சிங், "2047ல் இந்தியா 30 டிரில்லியன்டாலர்பொருளாதாரமாக மாறும் நோக்கத்தில், வேளாண் வளர்ச்சி 4% ஆக இருக்க வேண்டும். இயந்திரமயமாக்கல் என்பது தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க முக்கியமான வழி. தற்போது 47% உள்ள இயந்திரப் பயன்பாடு 2047ல் 75% ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்றார்.

'அக்ரி இன்டெக்ஸ் 2025' கண்காட்சியில், 6 அரங்குகளில் 600க்கும் மேற்பட்ட நிறுவங்கள் வேளாண் தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கண்காட்சிக்கு வைத்துள்ளன. விதை முதல் அறுவடை வரை வேளாண் நடவடிக்கைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் காணப்படுகின்றன. விவசாயிகளுக்காக பயனுள்ள கருத்தரங்குகள் மற்றும் வழிகாட்டல் அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த கண்காட்சியில் வேட்டி சட்டை அணிந்த ரோபோ வரவேற்பளித்தது அனைவரின்கவனத்தையும் ஈர்த்தது.

## அக்ரி இன்டெக்ஸ் 'கண்காட்சியில் உழவே தலை' வேளாண் கருத்தரங்கு

'அக்ரி இன்டெக்ஸ்' கண்காட்சியில் ஞாயிற்றுக் கிழமை உழவே தலை' வேளாண் கருத்தரங்கு நடக்கிறது.

இந்திய தொழில் வர்த்தக சபையின் கோவை தலைவர் ராஜேஷ்லுந்த், 'உழவே தலை' கருத்தரங்கு தலைவர் துரைராஜ், செயலாளர்பிரதீப்ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்திய தொழில் வர்த்தக சபை கோவை சார்பில் கடந்த 2017-ம் ஆண்டு முதல் 'உழவே தலை' என்ற தலைப்பில் வேளாண்கருத்தரங்கு 'அக்ரி இன்டெக்ஸ்' கண்காட்சியில் இடம்பெறுகிறது.

இவ்வாண்டிற்கான நிகழ்வுகொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் இன்று (ஜூலை 13) காலை 9.15 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடக்கிறது.

வேளாண்துறைசார்ந்த பல்வறு தலைப்புகளில் நடைபெறும் இந்நிகழ்வில் துறைசார்ந்த வல்லுநர்கள் பங்கேற்று பேசுகின்றனர். கருத்தரங்கு நிறைவாக கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும், என்றனர்.

# இஎஸ்ஐ மருத்துவமனையில் காத்திருப்போர் அறையை திறந்து வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம்



கோவைமாவட்டம் சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட இஎஸ்ஐ மருத்துவமனையில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டி முடிக்கப்பட்ட 2 பயனாளிகள் காத்திருப்போர் அறையை சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் இஎஸ்ஐ மருத்துவமனை டீன் ரவீந்திரன், முதல்வர் சித்ரா, ஆர்எம்ஓ மணிவண்ணன், பகுதி செயலாளர் உலகநாதன், மாரப்பன், வட்ட செயலாளர் பன்னீர்செல்வம், மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

THE KOVAI HERALD
July 13, 2025 - Sunday

# உற்சாகத்தில் அதிமுக தொண்டர்கள்






▶ மேட்டுப்பாளையத்தில் மக்கள் வெள்ளத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட எடிப்பாடி பழனிச்சாமி.

தி கோவை ஹெரால்டு

அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப் பாடி கே.பழனிசாமி, அதிமுகவின் எஃகு கோட்டை எனபுகழப்படும் கொங்கு மண்டலத்தில் 2026-க்கான தேர்தல் பிரச்சாரத்தை, வல்லமை அருளும் வன பத்ரகாளியம்மன் கோவில் இருந்து தொடங்கினார்.

புரட்சித்தலைவிஜெயலலிதா விண்ணுலகத்திலிருந்து ஆசிகள் வழங்க, விண்ணதிர மேள தாளங்களோடு மேட்டுப்பாளையம் பஸ் நிலையம் அருகே பெருந்திரள் கூட்டத்தில் பேருரையாற்றினார் அக்கட்சியின் பொதுச் செயலாளர்.

தொடர்ந்து கவுண்டம்பாளையம், கோவை வடக்கு, தெற்கு தொகுதிகளின்பல்வேறுஇடங்களில் ஆளும் திமுக அரசின் அவலங்களை, கூடியிருந்த பொதுமக்கள் மத்தியில் எடுத்துரைத்தார்.

“அதிமுக ஆட்சியில்தமிழகத்தின் அணைகளில்குடிமராமத்து பணிகள்மூலம்,தூர் வாரும் பணிகளை செம்மையாக்கினோம். திமுக ஆட்சியாளர்கள்அணைகள் பக்கமே போகவில்லை.

அதிமுக ஆட்சி அமைந்த பின் சிறுவாணி உள்ளிட்ட அனைத்து அணைகளையும் மீண்டும் தூர் வாரும் பணிகளை மேற்கொள்வோம் எனவும், திமுக ஆட்சியால் குழந்தைகள் முதல் வயதானவர் வரை அனைவரும் ஏதாவது ஒரு வகையில் பாதிப்படைந்து விட்டனர் என கூறினார்.

எதிர்க்கட்சி கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்பி வேலுமணி, கடந்த தேர்தலில்,திமுகஎனும்தீய சக்தியைகோவைமாவட்ட மக்கள், முழுமையாக புறக்கணித்ததைப்போல ,வரும்தேர்தலிலும்,மக்கள் தக்கபாடம்புகட்டதயாராக உள்ளனர் என்றார்.

முன்னாள் அமைச்சர் எஸ். பி.வேலுமணி தலைமையில், மாவட்ட செயலாளர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.ஜி. அருண்குமார், அம்மன் அர்ஜுணன் , சட்டமன்ற உறுப்பினர்கள் கே.ஆர். ஜெயராம், ஏ.கே.செல்வராஜ், மத்திய இணையமைச்சர் எல். முருகன், தமிழக பாஜக தலைவர் நையினார் நாகேந்திரன் உள்ளிட்ட அனைவரும் கோவை மாவட்டத்திற்கு வருகை தந்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு பொதுமக்கள், கட்சியினர் என அனைவரையும் ஒன்று திரட்டி பெரும் வரவேற்பு அளித்தனர்.

பிரச்சாரத்தின் போது, டவுன்ஹாலில் கிரேன் உதவியுடன் மிகப்பெரியரோஜாமாலைபொதுச் செயலாளர்எடப்பாடிபழனிசாமிக்கு அணிவிக்கப்பட்டது. அனைத்து இடங்களிலும் வண்ண, வண்ண குடைகளுடன் வானவேடிக்கையும் செண்டைமேளம்முழங்க அதிமுக பொதுச்செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

## செஞ்சி கோட்டைக்கு யுனெஸ்கோ உலக பாரம்பரிய அங்கீகாரம் தமிழகத்திற்கு பெருமை



உலகின் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களுக்கு யுனெஸ்கோ தனது அங்கீகாரத்தை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை தஞ்சாவூர் பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், ஐராவதேஸ்வரர் கோயில், மாமல்லபுரம் நினைவுச்சின்னங்கள், நீலகிரி மலை ரயில் பாதை ஆகிய ஐந்து நினைவுச் சின்னங்களுக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தப் பட்டியலில் தற்போது ஆறாவது இடமாக செஞ்சி கோட்டையும் இணைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்தியா முழுவதும் உள்ள மராத்தியர்களின் ராணுவ தளங்களை யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்க மத்திய அரசு பரிந்துரை செய்தது. இதையடுத்து, யுனெஸ்கோ பிரதிநிதி ஹவாஜங் லீ ஜகாம்ஸ் இந்தியாவுக்கு வந்து அவை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். தற்போது பிரான்சில் நடைபெற்றுவரும் யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் 47-வது கூட்டத்தில், மஹாராஷ்டிராவில் உள்ள 11 மராத்திய ராணுவ தளங்களுடன், தமிழ்நாட்டில் உள்ள செஞ்சிக் கோட்டையும் உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் மூலம், இந்தியாவில் யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற சின்னங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள செஞ்சி கோட்டை, 1190 ஆம் ஆண்டு அனந்தக்கோன் என்பவரால் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. இந்தக் கோட்டைக்கு தொடர்ந்து விஜயநகரப் பேரரசு, நாயக்கர்கள், பீஜாப்பூர் சுல்தான்கள், முகலாயர்கள், மராத்தியர்கள், பிரெஞ்சு மற்றும் பிரித்தானிய ஆட்சிகள் வந்தன.

முக்கோண வடிவமைப்புடன், 3 பெரிய மலைகளும், 2 சிறிய குன்றுகளும், 12 கி.மீ நீளமுள்ள மதிலும், 80 அடி அகலமுள்ள அகழிகளும் உள்ளன. கோட்டையின் உள்ளே கோவில்கள், மண்டபங்கள், படைவீரர்கள் தங்கும் இடங்கள், நெல் களஞ்சியம், சிறைச்சாலைகள், தானியக் களஞ்சியம், கல்யாண மஹால், புனிதக் குளம், செஞ்சியம்மன் கோயில் எனப் பல கட்டடக் கழிவுகளும் காணப்படுகின்றன. கீழ்க் கோட்டைக்கு செல்ல இரண்டு முக்கிய வாயில்கள் உள்ளன வடக்கில் வேலூர் வாயில், கிழக்கில் பாண்டிச்சேரி வாயில். இரண்டிலும் 24 அடி அகலமும், 60 அடி ஆழமும் கொண்ட கணவாய்கள் உள்ளன. எதிரிகளை தடுக்க இழுவைப்பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. போர்காலத்தில் இவை அகற்றப் பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுவந்தது.

இந்த அங்கீகாரத்தால், செஞ்சிக்கோட்டைக்கு அதிக நிதி உதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், இது பெரியளவில் சுற்றுலா வளர்ச்சி பெறும் முக்கியத் தளமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கு ஒரு புதிய அத்தியாயம் ஆகும்.

## கவுண்டம்பாளையத்தில் தார் சாலை போடும் பணிக்கு பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார்



கோவை கவுண்டம்பாளையம் ஸ்ரீ வச்சா என்கிலேவ் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.17.50 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி. அருண்குமார் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். உடன் துடியலூர் பகுதி செயலாளர் வனிதாமணி வட்ட செயலாளர் பந்தல் வீடு பிரகாஷ், சுரேஷ், சுரேஷ்பாபு மற்றும் சார்பணி பகுதி நிர்வாகிகள்.

## நயன்தாரா கோவில்களுக்கு செல்லும் ரகசியம் இதுதான்...



நானும் ரவுடிதான் படத்தின் மூலம் நயன்தாராவும் விக்னேஷ்சிவனும் காதலித்து வந்தனர். நீண்ட காலம் கழித்து இருவரும் திருமணம் செய்துகொண்டனர். இவர்களின் பிரம்மாண்டமான திருமணத்தை ஒளிபரப்பும் உரிமையை நெட்பிளிக்ஸ் தளத்திற்கு பல கோடிகளுக்கு விற்றார்கள். தனது அனுமதி இல்லாமல் தான் தயாரித்த நானும் ரவுடிதான் படத்தில் இருந்து நயன்தாரா திருமண ஆல்பத்தில் காட்சிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் நடிகர் தனுஷ். இந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

தற்போது, நயன்தாரா திருமண ஆல்பத்தில் சந்திரமுகி படத்தில் இருந்து தங்கள் அனுமதி இல்லாமல் காட்சிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக சந்திரமுகி படத்தின் காப்பிரைட் உரிமையை வைத்திருக்கும் ஏபி இண்டர்நேஷனல் நிறுவனம் வழக்கு தொடர்ந்திருக்கிறது. முறையாக முன் அனுமதி பெறாமல் விக்னேஷ் சிவன் இப்படிச் செய்து நயன்தாராவை தேவையில்லாத சிக்கலில் எல்லாம் சிக்க வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

திருமணம் ஆல்பம் இத்தனை பிரச்சனையில் இருந்தாலும் வாடகைத் தாய்மூலம் இரட்டைக்குழந்தைகள் பெற்று அவர்கள் வளர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்தசில தினங்களுக்கு முன்பாக, நயன்தாரா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ”குறைவான அறிவுடைய வரை ஒருவரை நீங்கள் திருமணம் செய்துகொண்டால் உங்கள் திருமணம் மிகப்பெரிய தவறாக மாறும். கணவர் செய்கின்ற தவறுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? என்னை விட்டு விடுங்கள்.

நான் ஏராளமான பிரச்சனைகளை உங்களால் அனுபவித்துவிட்டேன்’’ என்று பதிவிட்டதாகவும், பின்னர் சிறிது நேரத்தில் அப்பதிவை நீக்கிவிட்டதாகவும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவிவருகின்றன. சிலர், நயன்தாரா அப்படி ஒரு பதிவைப்போடவே இல்லை. அவர் அப்படி பதிவிட்டதாக அவருக்கு வேண்டாத சிலர்தான் பரப்பி வருகின்றனர் என்கிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க, அண்மைக்காலங்களில் கோயில்கோயிலாக கணவர், குழந்தைகளுடன் சென்று வழிபட்டு வருகிறார் நயன்தாரா. இதற்கு காரணம் ஒரு ஜோதிடர். அவர் நயன்தாராவின் நிழல் போலவே அவர் செல்லும் இடங்களில் எல்லாம் சென்று வருகிறார்.

அஜித்குமார் விபத்தில் சிக்கப்போகிறார் என்று சொல்லி இருந்தேன். அது நடந்தது. அது மாதிரி பலருக்கு தான் சொன்னது பலித்தது என்றும், நயன்தாரா ஒரு வழக்கில் சிக்கப்போகிறார் என்று அந்த ஜோதிடம் சமூக வலைத்தளத்தில் சொன்னதாகவும், அவர் சொன்னது மாதிரியே ‘சந்திரமுகி’ பட வழக்கு வந்திருப்பதால் அந்த ஜோதிடரை சந்தித்து அவர் சொன்னபடியேதான் நயன்தாரா கோவில் கோவிலாக சென்று வழிபட்டுவருகிறார் என்றும் சொல்லப்படுகிறது.






Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.